# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT – I ( 2013-2014 )

DURATION : 3 HOURS | TAMIL | MARKS : 90

கால அளவு : 3 மணி | தமிழ் | மதிப்பெண்கள் : 90

CLASS : VIII | எட்டாம் வகுப்பு

## பகுதி-1

அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பழங்காலத்தில் வாழ்ந்த நாகரிகமற்ற மனிதன் விலங்குகளின் தோலையும் , பறவைகளின் இறகுகளையும் , இலைத்தழைகளையும் ஆடையாக அணிந்தான். நாகரிகம் வளர வளரத்தான் பருத்தி , பட்டு , உரோமம் இவற்றைக் கொண்டு ஆடைகள் நெய்யப்பட்டன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் பால் ஆவியைப் போன்ற மெல்லிய ஆடைகளும் . பாம்புத்தோல் போன்ற பல நிறங்கள் கொண்ட உடைகளும் நெய்யப்பட்டன. இடத்திற்கு இடம் தட்பவெப்ப நிலைகள் மாறுபாட்டிற்கு ஏற்ப ஆடை வகைகளும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. எஸ்கிமோக்கள் வடதுருவக் குளிரைத் தாங்கிக் கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் உரோமம் அடர்ந்த , தடிப்பான தோல் ஆடைகளை உடுப்பார்கள். அரேபியாவில் வெயில் மிக அதிகம். மணல் சூறாவளிகள் சுழன்றடிக்கும். அங்குள்ள மக்கள் அடுக்கடுக்கான மெல்லிய ஆடையால் தம் உடல் முழுவதையும் மூடிக் கொள்வார்கள். நாகரிக மக்கள் பெரும்பாலும் சம தட்பவெப்ப நாடுகளில்தான் வாழ்கிறார்கள். அவர்கள் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளையும், கோடையில் பருத்தி ஆடைகளையும் அணிவார்கள். இப்போது விஞ்ஞான முறையில் 'நைலான்' , 'டெர்லீன்' போன்ற ஆடைகள் செய்யப்படுகின்றன.

வினாக்கள் 10

1.பழங்கால மனிதனின் ஆடைகளைப் பற்றி கூறுக.

2.இடத்திற்கு இடம் ஆடைகள் மாறுபடக் காரணம் என்ன ?

3.எஸ்கிமோக்களின் ஆடைகள் எத்தகையது ? ஏன் ?

4.விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படும் ஆடைகள் யாவை ?

5.அரேபியாவின் சீதோஷ்ண நிலை எப்படிப்பட்டது ?

ஆ.கட்டுரை எழுதுக. 8

'தேசிய ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

இ.கடிதம் எழுதுக. 8

நீ கண்டு களித்த பொருட்காட்சி பற்றித் தோழன்/தோழிக்குக் கடிதம் எழுதுக.

# பகுதி -2

**இலக்கணம் :** 15

அ. பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெயர்த் திரிசொல்

அ. கடல் ஆ. களிறு இ. ஞாயிறு ஈ. அமர்ந்தான்

2. குணப் பண்புப்பெயர்

அ. குறுங்கோல் ஆ. கருங்குதிரை இ. ஈகையுள்ளம் ஈ. செந்தாமரை

3. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

அ. ஆட்டம் ஆ. ஓடு இ. பேறு ஈ. வருகை

ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

4. ஆகு பெயர் ____________ வகைப்படும்.

அ. ஆறு ஆ. பத்து இ. பன்னிரண்டு ஈ. பதினாறு

5. விஷம் என்பது ____________

அ. திசைச்சொல் ஆ. வினைச்சொல் இ. வடசொல் ஈ. திரிசொல்

6. ஒரு பொருள் செய்யும் தொழிலை உணர்த்தும் பெயர் ____________

அ. ஆகு பெயர் ஆ. பண்புப் பெயர் இ. தொழிற்பெயர் ஈ. இடப் பெயர்

இ. அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7. மலர் ( வடசொல் தருக )

அ. கமலம் ஆ. புஷ்பம் இ. பூ ஈ. மலர்கள்

8. அவியல் சாப்பிட்டான் (எவ்வகை ஆகு பெயர் ?)

அ. பண்பாகு பெயர் ஆ. முதலாகு பெயர்

இ. தொழிலாகு பெயர் ஈ. சினையாகு பெயர்

9. நல்குரவு ( எவ்வகை இலக்கிய சொல் ?)

அ. பெயர் இயற்சொல் ஆ. பெயர் திரிசொல்

இ. வினை திரிசொல் ஈ. திசைச்சொல்

ஈ.பொருத்தமான இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

10.செந்தாமரை

அ.வடிவப் பண்புப்பெயர் ஆ.நிறப் பண்புப்பெயர்

இ.குணப் பண்புப்பெயர் ஈ.இடவாகு பெயர்

11.ஆசிரியர் தலைக்கொரு வினாத்தாள் தந்தார்

அ.பண்பாகு பெயர் ஆ.தொழிலாகு பெயர்

இ.சினையாகு பெயர் ஈ.காலவாகு பெயர்

12.பெற்றம்

அ.திசைச்சொல் ஆ.வடசொல்

இ.திரிசொல் ஈ.இயற்சொல்

உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக

13.அ.மல்லிகைச் சூடினாள் - முதலாகு பெயர்

ஆ.மல்லிகைச் சூடினாள் - காலவாகு பெயர்

இ. மல்லிகைச் சூடினாள் - சினையாகு பெயர்

ஈ. மல்லிகைச் சூடினாள் - பண்பாகு பெயர்

14.அ.செய்கை என்பது விகுதி பெற்ற தொழிற்பெயர்

ஆ. செய்கை என்பது முதனிலை தொழிற்பெயர்

இ. செய்கை என்பது முதனிலை திரிந்த தொழிற்பெயர்

ஈ. செய்கை என்பது ஆகு பெயர்

15.அ.சினையின் பெயர் அதன் முதல் பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர்

ஆ.சினையின் பெயர் அதன் முதல் பொருளுக்கு ஆகி வருவது முதலாகு பெயர்

இ.சினையின் பெயர் அதன் முதல் பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர்

ஈ.சினையின் பெயர் அதன் முதல் பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர்

# பகுதி -3

அ.கோடிட்ட இடத்தை நிரப்புக. 5

1.இராமலிங்க அடிகளாரின் பாடல்கள் அனைத்தும் கொண்ட நூல் ____________

2.உ.வே.சா.அவர்களின் வரலாறு ____________ என்னும் வார இதழில் தொடராய் வந்தது.

3.திருக்குறள் ____________ எனப் போற்றப்படுகிறது.

4.பறவைகள் சரணாலயங்கள் தமிழ்நாட்டில் __________ உள்ளன.

5.இராமலிங்க அடிகளாரின் சிறப்புப் பெயர் ________________ ஆகும்.

ஆ.பொருள் கூறுக. 5

1.ஆவணம் 2.வன்பாற்கண் 3.யாக்கை 4.பண் 5.பூசல் தரும்

இ.பிரித்து எழுதுக. 2

1.அருந்தமிழ் 2.அன்புடையார் 3.வியப்பூட்டும் 4.எழுத்தாணி

ஈ.எதிர்ச்சொல் எழுதுக. 2

1.சுருக்கமாய் 2.இயற்கை 3.நண்பு 4.வற்றல்

உ.பொருத்துக. 2

1.திருவருட்பா - தஞ்சாவூர்

2.சரஸ்வதி மகால் - கபிலர்

3.குறிஞ்சிப்பாட்டு - திருநெல்வேலி

4.கூந்தன்குளம் - இராமலிங்க அடிகளார்

# பகுதி -4

அ.கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட பல்விடை வினாக்களுக்கு விடையளி. 5

அக்காலத்தில் பனை ஓலையைப் பக்குவப்படுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள். இதற்கு ஓலைச்சுவடி என்று பெயர். செய்யுள் , இலக்கணம் முதலியன ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டன. அப்படி எழுதப்பட்ட சுவடிகளை வாசித்து , நமக்காகத் தாளில் எழுதி அச்சிட்டுப் புத்தகமாக வழங்கினார் உ.வே.சா.' குறிஞ்சிப்பாட்டு' என்னும் சுவடியைப் பதிப்பிப்பதற்காக எழுதிக்கொண்டிருந்தார். அச்சுவடியில் தொண்ணூற்று ஒன்பதுவகையான

பூக்களின்பெயர்கள் இருந்தன. அவற்றுள் மூன்று பூக்களின் பெயர்கள் தெளிவாக இல்லை. ஆனால் அதனை அவர் விட்டுவிடவில்லை. அந்த பூக்களின் பெயர்கள் தெளிவாக உள்ள சுவடி யாரிடமாவது இருக்காதா என மறுபடியும் தேடிச் சென்றார். குறிஞ்சிப்பாட்டு பத்துப்பாட்டு நூல்களுல் ஒன்று. பல மாதங்கள் கழித்து , அவர் தேடிய பூக்களின் பெயர்கள் உள்ள சுவடி ஒன்று கிடைத்தது. அதன் பிறகே அந்நூலை அச்சுக்குக் கொடுத்தார்.

வினாக்கள்

1. ஓலைச்சுவடிக்குப் பயன்படுத்தப்பட்ட ஓலை ____________

அ. தென்னை ஓலை ஆ. பனை ஓலை இ. ஈச்ச ஓலை

2. __________ , __________ ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டன.

அ. கணிதம் , வானியல் ஆ. சோதிடம் , மருத்துவம் இ. செய்யுள் , இலக்கணம்

3. குறிஞ்சிப்பாட்டில் உள்ள பூக்களின் எண்ணிக்கை ________

அ. தொண்ணூற்றொன்பது ஆ. தொண்ணூற்றாறு இ. மூன்று

4. குறிஞ்சிப்பாட்டு ____________ நூல்களுள் ஒன்று.

அ. எட்டுத்தொகை ஆ. பத்துப்பாட்டு இ. காப்பியங்கள்

5. உ.வே.சா. தேடிய பூக்களின் பெயர் உள்ள ஓலைச்சுவடி ________ கழித்து கிடைத்தது.

அ. சில நாட்கள் ஆ. பல வருடங்கள் இ. பல மாதங்கள்

ஆ. எவையேனும் எட்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை தருக. 16

1. இராமலிங்க அடிகளாரின் கொள்கைகள் யாவை ?

2. உ.வே.சா. புதுப்பித்த காப்பியங்களையும் , சங்க நூல்களையும் எழுதுக.

3. உ.வே.சா ஏன் கொடுமுடிக்குச் சென்றார் ?

4. திருவள்ளுவரின் வேறுபெயர்கள் யாவை ?

5. அன்பில்லாத வாழ்க்கை தழைக்காது - எதைப் போல ?

6. வலசைபோதல் என்றால் என்ன ?

7. தமிழ்நாட்டிலுள்ள பறவைகள் சரணாலயங்கள் நான்கினைக் கூறுக.

8. எவர் வானுலகத்தில் தேவராய் வாழ்வர் ?

9. கூந்தன்குளக் கிராமச் சரணாலயம் குறித்து எழுதுக.

10. யாரை நாம் வள்ளலார் என அழைக்கிறோம் ? அவர் எங்கு பிறந்தார் ?

<u>இ.எவையேனும் இரண்டிற்கு மட்டும் விரிவான விடை தருக.</u> 6

1.இறைவன் எவற்றிலெல்லாம் கலந்ததாய் இராமலிங்க அடிகளார் கூறுகிறார் ?

2.குறிஞ்சிப்பாட்டு நூலைப் புதுப்பிக்க உ.வே.சா. மேற்கொண்ட முயற்சி என்ன ?

3.நாடாச் சிறப்பு என வள்ளுவர் எதைக் குறிப்பிடுகிறார் ?

4.மனிதர்களின் நல்ல நண்பன் எது ? அந்நண்பனுக்கு நாம் எவ்வாறு உதவலாம் ?

<u>ஈ.அடிபிறழாமல் எழுதுக.</u>

1.' கண்ணில்' - எனத் தொடங்கும் திருவருட்பா பாடலை எழுதுக. 4

2.' புறத்துறுப்பு ' - எனத் தொடங்கும் குறளை எழுதுக. 2

அல்லது

'பிறர்க்கு' - என முடியும் குறளை எழுதுக.

*****************